செ.வெ.எண் : 738 நாள்: 12.11.2020

**தஞ்சாவூர் மாவட்ட திட்டை அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோவிலில் குரு பெயர்ச்சி விழாவில் தரிசிப்பதற்கு மட்டுமே அனுமதி பூஜைப் பொருட்கள் கொண்டு செல்லவும்,அர்ச்சனை செய்யவும் அனுமதி கிடையாது என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்டம் திட்டை அருள்மிகு வசிஷ்டேஸ்வரா் திருக்கோயில் எதிர்வரும் 15.11.2020 அன்று நடைபெறயுள்ள குருபெயர்ச்சி விழாவினை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் இன்று (12.11.2020) நேரில் ஆய்வு. **இவ்வாய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

குரு பெயர்ச்சி விழாவிற்கு வருகை தரும் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் அனைவரும் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முகக்கவசம் அணிந்து வர வேண்டும்.பக்தர்கள் அனைவருக்கும் வெப்பமானி கொண்டு பரிசோதனை செய்து,கை சுத்திகரிப்பான் சுத்திகரிப்பு பின்பே கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

தற்காலிக மருத்துவ முகாம் மற்றும் போதுமான எண்ணிக்கையில் மருத்துவ பணியாளர்கள் சுகாதார அலுவலர்கள் சுழற்சிமுறையில் பணியமர்த்தப்படவுள்ளனர் மருத்துவமுகாம் அவசரகால வழிகள் உள்ளிட்ட பாதைகளை ஏற்படுத்தவும்,மருத்துவர குழுவினருடன் தயார் நிலையில் ஆம்புலன்ஸ் வசதி போன்றவை ஏற்பாடு செய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பக்தர்களுக்கு குடிநீர் வசதி,திருக் கோயிலின் சுற்றுப்புறங்களில் தற்காலிக கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளதா? ஏன ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ,பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் கோவில் நிர்வாகமும்,உள்ளாட்சித்துறையினரும் மேற்கொள்ளவும்,பக்தா்கள் கோவிலுக்கு சென்று வர தடுப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளதா? ஏன ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தவும்,பக்தா்கள் எளிதாக சிரமமின்றி தரிசனம் செய்யும் வகையில் தடுப்பு கட்டைகள், தரிசன பாதையில் மழை நீர் தேங்காதவாறு மணல் பரப்புகள், பக்தா்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் வழிகாட்டு பலகைகள்,கோவில் குளத்தில் தடுப்பு கட்டைகள் அகியவை ஏறப்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணிக்காக கூடுதல் காவலர்களை பாதுகாப்பு பணியில் அமர்த்திடவும் திருக்கோவில் வளாகம் மற்றும் வெளிப்புறங்களில் கண்காணிப்பு கேமராக்களை கொண்டு கண்காணித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது..

தமிழக அரசு வெளியிட்டுள்ள கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளின்படி **பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தரிசிப்பதற்கு மட்டுமே அனுமதி பூஜைப் பொருட்கள் கொண்டு செல்லவும்,அர்ச்சனை செய்யவும் அனுமதி கிடையாது. 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களை திருக்கோயிலுக்கு உள்ளே சென்றிட அனுமதி கிடையாது** என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளளார்.

இவ்வாய்வின் போது கோட்டாட்சியர் திருமதி வேலுமணி,இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு.கிருஷ்ணன்,திருக்கோயில் செயல் அலுவலா் திருமதி தனலெட்சமி தஞ்சாவூர் வட்டாட்சியர் திரு.வெங்கடேஸ்வரன் தஞ்சாவூர் வட்டார வளர்ச்சி அலுவலா் திரு.பிரபாகரன் மற்றும் அலுவலா்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.